விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 217 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 08 திங்கட்கிழமை (24.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வவுனியாவில் கொடூரம்
# வன்முறைக் கும்பலொன்று கொலைவெறித் தாக்குதல்

- குடும்பப் பெண் எரித்துப் படுகொலை
- ஆபத்தான நிலையில் கணவன்
- மேலும் 10 பேர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடொன்றினுள் புகுந்த வன்முறைக் கும்பல் வீட்டில் இருந்தவர்களை வாளரல் வெட்டி தீ வைத்ததில் 21 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் கணவன் ஆபத்தான நிலையிலும் சிறுவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை, எடை பதிவு செய்தல் கட்டாயம்
### வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

பாணின் விலை மற்றும் எடையை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுமார் 159 ஆண்டுகள் பழமையான பாண் கட்டளைச் சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு நடைமுறைக்கு வந்தது.

இந்த புதிய ஒழுங்குமுறையின் கீழ், அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற் 11

## 162 கிலோ கஞ்சா மாமுனையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமுனை கடற்பகுதியில் வைத்து கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து கஞ்சாவை எடுத்து செல்ல பயன்படுத்திய படகு மற்றும் 162 கிலோ எடையுள்ள கஞ்சா பொதிகள் என்பன மீட்கப்பட்டன. 11

### தமிழர் தாயகத்தில்
## உணர்வெழுச்சியுடன் கறுப்பு ஜூலை நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கறுப்பு ஜூலை கலவரம் இடம்பெற்று நேற்றுடன் 40 ஆண்டு நிறைவடைந்த நிலையில், தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் உணர் 11

## கல்வியங்காட்டில் வீடு ஒன்றில் பணிபுரியும் சிறுமி சடலமாக மீட்பு
### இறப்பில் மர்மம் என உறவினர்கள் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் வீட்டில் பணிபுரிந்த சிறுமியொருவர் நேற்றைய தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை முதலி கோவிலடியைச்சேர்ந்த கேதீஸ்வரன் தர்மிகா என்கிற 17 வயதான சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த நான்கு மாதங்களாக சிறுமி 11

## யாழில் பேருந்திலிருந்து முதியவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இருந்து நேற்று யாழ். போத்னா வைத்தியசாலைக்கு சென்றவர் பேருந்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பேருந்தில் பயணம் செய்தவாறே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.


மரண விசாரணைகளை திடீர் மரண 11

## டொலரின் பெறுமதி ரூ.400ஐ தாண்டும்

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார நிலைமை 11

## அடுத்த அரசாங்கத்தையும் நாம் தான் அமைப்போம்
### மொட்டுக் கட்சி சூளுரை



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால் ஆதரிக்கப்படும் வேட்பாளர் நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி ஒரு கொலை கலாசாரத்தைக் 11

## 35 ரூபாய்க்கு சதொச ஊடாக முட்டை விற்பனை

(கொழும்பு)

எதிர்வரும் வாரத்தில் சதொச ஊடாக இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 35 ரூபாய்க்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக நாளாந்தம் சுமார் ஒரு இலட்சம் முட்டைகள் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார். 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி உரிமையாளருக்கு காணியை பெற்றுக் கொடுப்பதில் அலட்சியம்

## மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை

(புதுக்குடியிருப்பு)

சட்டரீதியான ஆவணங்களை வைத்திருக்கக் கூடிய காணி உரிமை யாளர் ஒருவரின் காணியை அவருக்கு மீளவும் கையளிக்கும் விடயத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அலட்சியப்போக்குடன் செயற்பட்டடுள்ளதாக யாழ். பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணி உரிமை தொடர்பில், பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர் ஒருவர் அண்மையில் யாழ். பிராந்திய மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்து இருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை மேற்கொண்ட மனித உரிமை ஆணைக்குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

குறித்த காணியானது, காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய அதன் பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது.

எனினும் அப்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக, இடம்பெயர்ந்த நிலையில் மீண்டும் காணி உரிமையாளர் தமக்குரிய மத்திய வகுப்பு காணிக்கான ஆவணங்களை சமர்ப்பித்து குறித்த காணியை மீட்டுத் தருமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் கோரியிருந்தார்.

அதேநேரம் இக் காணி சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, வடமாகாண காணி ஆணையாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வடமாகாண காணி ஆணையாளர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் அடங்கலாக இடம்பெற்ற பகுதி நாட் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பனவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் அவதானிப்புக்காக ஒரு வருடத்திற்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருந்தும் குறித்த காணி உரிமையாளரின் விடயத்தில் பிரதேச செயலகம் அலட்சிய போக்கில் செயற்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4)

# சாதாரண தரப் பரீட்சையை 10 ஆம் தரத்தில் நடத்த ஆராய்வு

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை 10 ஆம் தரத்திலும், க.பொ.த உயர்தரப் பரீட்சையை 12 ஆம் தரத்திலும் நடாத்த வேண்டும் என பாராளுமன்ற தெரிவுக்குழு சிபாரிசு செய்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயர்கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுதந்திரமான தேசிய கல்வி ஆணையத்தை நிறுவ முன்மொழிந்துள்ளதாகவும் நான்கு துறைகளின் கீழ், கல்வியை உயர்த்துவதற்கான பரிந்துரைகளை குழு முன்வைத்துள்ளதாகவும் அதன் தலைவரான நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கடந்த 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையை இல்லாதொழிக்க முன்மொழியப்பட்டுள்ளது. (4.7)

# கறுப்பு ஜூலை நினைவாக லண்டனில் போராட்டம்



(லண்டன்)

தமிழனத்தின் மீதான சிங்கள அரசின் திட்டமிட்ட இனப் படுகொலையாக அமைந்த 1983 கறுப்பு ஜூலையின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று லண்டனில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானியாவிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்பு குழு எனும் அமைப்பினால் 10 Downing street london இடத்தில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-7)


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-6960)

WORK IN UK
WORK PERMITS
CIVIL ENGINEERS
CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✔ 5 YEAR WORK PERMITS
✔ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✔ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777
(C-6960)


# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 04 . 1964



இறப்பு 18 . 07 . 2023

## மணியம் குணசேகரம் (வெள்ளைக்குட்டி)

உரும்பிராய் மேற்கு விளாத்தியடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மணியம் குணசேகரம் (வெள்ளைக்குட்டி) 2023.07.18 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மணியம் - மணியம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பசுபதி முருகையா - கெங்காதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் குலநாயகி(வவா) அவர்களின் அன்புக் கணவரும் வினிசன், அபிசன், விகாசினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் அறிவழகி, ராணிமலர், ஞானசேகரன், குகதாசன்(அப்பன்) ஆகியோரின் சகோதரனும் துர்க்காதரன், குலவாணி, குமுதினி, நிலானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்சினி, சுபாஜினி, சுதர்சினி, சுரேக்கா, சுபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தவராசா, சசிகுமார், அசோக் ஆகியோரின் சகலனும் கந்தசாமி, காலஞ்சென்ற வல்லிபுரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.07.2023 நாளை செவ்வாய்க்கிழமை ஜேர்மனி Hauptfriedhof Heilbronn Wollhausstra Be 132, 74074, Heilbronn உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று (இலங்கை நேரம் 12 மணியளவில் இருந்து 4 மணி வரை) இறுதிக் கிரியை நிகழ்வு நடைபெறும். குறித்த நிகழ்வு உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளாத்தியடி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:- மணியம் குடும்பத்தினர்
பசுபதி முருகையா(மாமா)

(16397)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 01 . 1948



மறைவு 22 . 07 . 2023

## திருமதி சண்முகாதேவி சிவனொளிபாதம்

தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகாதேவி சிவனொளிபாதம் அவர்கள் 22.07.2023 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சிவனொளிபாதம்(இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் கோபிநாத்(Quantity Suveyor -சவுதி), முரளிநாத் (குடியேற்ற உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி), கஜன்நாத்(Civil Engineer) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வைஸ்ணவி, கிருஷாந்தி (ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), சர்மீரா(முகாமைத்துவ உதவியாளர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் அர்ஜுன், ஆகாஷ், யாதேவ், அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் சரோஜினிதேவி (டென்மார்க்), காலஞ்சென்ற ஞானேஸ்வரதேவி ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரலிங்கம், காலஞ்சென்ற இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சுந்தரம் செல்லத்துரை (ஒப்பந்தகாரர்), சுந்தரம் சிவஞானம்(அதிபர்) ஆகியோரின் மருமகளும் நடராஜா அன்னபூரணத்தின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.07.2023 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
பத்தானை வீதி, தாவடி தெற்கு
கொக்குவில்.

தொ.இல.: 077 3790 948
077 226 3904

(16399)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி திறன்கள் உள்ள போதிலும்
# உரிய முறையில் பயன்படுத்துவதில்லை
## இலங்கை குறித்து உலக வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் அதிகமான அளவில் ஏற்றுமதி திறன்கள் உள்ள போதிலும் அது உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது.**

இதற்கமைய ஏற்றுமதி மூலம் பெறக்கூடிய கணிசமான வருவாயினை இலங்கை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உலக வங்கியின் வதிவிட பிரதிநிதி ஃபாரிஸ் ஹடாட் சேவோஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலக்கூறுகள் இருந்தும் அது உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையின் மீட்சியை நோக்கிய பசுமை மீள்தன்மை மற்றும் அபிவிருத்தி” என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

பொருளாதாரத்தில் பின்னடைவை எதிர் நோக்கியுள்ள இலங்கை, கடந்த ஒரு வருட காலப்பகுதியினில் சிறந்த முன்னேற்றத்தை நோக்கி நகர்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில மாத காலப்பகுதியில், குறிப்பிட்ட பொருளாதார ஸ்திரத்தன்மையினை பெறும் தன்மையை இலங்கை கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உலக வங்கியின் வதிவிட பிரதிநிதி ஃபாரிஸ் ஹடாட் சேவோஸ் வலியுறுத்தியுள்ளார். (நி)

# போதிய எரிபொருள் கையிருப்பில்
## அமைச்சர் காஞ்சன டுவிட்

(கொழும்பு)



அரசாங்கத்திடம் தற்போது போதிய எரிபொருள் கையிருப்பு இருப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணி நிலவரப்படி அரசாங்கத்திடம் 133,936 மெற்றிக் தொன் டீசலும் 6,192 மெற்றிக் தொன் சுப்பர் டீசலும் உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் தளத்தில் அறிவித்துள்ளார். (நி)

# கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும்
## விசேட பாராளுமன்ற தெரிவுக்குழு பரிந்துரை

(கொழும்பு)

கல்வியின் தரம் மற்றும் சமத்துவத்தை உருவாக்குவதற்கான தேசிய கொள்கையை அரசாங்கம் தயாரிக்க வேண்டும் என நாட்டில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான முன்மொழிவுகளை முன் வைப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்ற தெரிவுக்குழு பரிந்துரைத்துள்ளது.

அந்த குழு பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கல்விபொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையை 10 ஆம் வகுப்பிலும் உயர்தரப் பரீட்சையை 12 ஆம் வகுப்பிலும் நடத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரிக்க வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது. (நி)

# கணனிக் கட்டமைப்பில் சிக்கல் நிலை
# கடவுச்சீட்டு விநியோகத்தில் தாமதம்

(கொழும்பு)

இணையவழி விண்ணப்ப முறைமையின் மூலம் சுமார் 35 ஆயிரம் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்ட போதிலும், இதுவரை 3 ஆயிரத்து 700 கடவுச்சீட்டுகள் மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் கடந்த 20 ஆம் திகதி வரையில் 35 ஆயிரத்து 145 பேர் கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களில் 16 ஆயிரத்து 869 விண்ணப்பதாரர்கள் மட்டுமே உரிய பிரதேச செயலகங்களில் தங்களது கைரேகைகளை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவர்களில் 3 ஆயிரத்து 712 பேருக்கான கடவுச்சீட்டுகள் மட்டுமே தற்போது வரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

கணனிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் பல விண்ணப்பங்கள் தேங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விரைவில் சிக்கல்களை நிவர்த்தி செய்து, கடவுச்சீட்டு விநியோகத்தை விரைவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி)

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு

(கொழும்பு)

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோசிமசா அயாஸி அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜப்பான் நாட்டு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும்.

தற்போது இடம்பெற்று வரும் கடன் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் இதன்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் கவனம் செலுத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 2 ஆம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை கற்றல் செயற்பாடுகளின் முதற்கட்ட பணிகள் இன்று முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வரை இடம்பெறும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் அடுத்த மாதம் 28 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வரையில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மூன்றாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை இடம்பெறும்.

அத்துடன் மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, பிரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.07 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் டபிள்யூ. டி. ஐ. ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையும் அதிகரிப்பை பதிவு செய்து 77.07 அமெரிக்க டொலராக ஆக பதிவாகியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஜூலை கலவரத்தில் தப்பியவர்களை சந்தித்தார் கனடா பிரதமர்

(ஒட்டாவா)

இலங்கையில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை கலவரத்தில் தப்பியவர்களை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சந்தித்து அவர்களின் உணர்வுகளை கேட்டறிந்தார்.

இதனை அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மனதை நெகிழவைக்கும் காலை. கறுப்பு ஜூலையின் பயங்கரமான வன்முறைகளில் இருந்து உயிர்தப்பியவர்களின் கதைகளை செவிமடுத்தேன்.

உங்கள் கதைகளை பகிர்ந்து கொண்டமைக்கு நன்றி. உங்கள்வலிமை, உங்களின் நம்பிக்கை, மீண்டும் எழும் திறன் ஆகியவற்றை ஒருபோதும் நான் மறக்க மாட்டேன் எனவும் அவர் பதிவிட்டுள்ளார். (நி)


பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணக்குப் பதியுநர்கள் (பெண்கள்)

கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)
வயது – 24 இற்கு மேல்

பொது முகாமையாளர்
வலம்புரி

தொடர்பு: 076 097 3121


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டெஸ்டில் 130 வருட சாதனையை சமன் செய்த இங்கிலாந்து அணி







இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 592 ரன்கள் குவித்தது.

அந்த அணியின் முதல் ஏழு பட்ஸ்மேன்களில் ஆறு பேர் 50 ரன்களை கடந்தனர்.

இதன் மூலம் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணியின் முதல் ஏழு பேரில் ஆறு பேர் அரைசதம் தொட்ட நிகழ்வு 2 ஆவது முறையாக நிகழ்ந்துள்ளது.

இதற்கு முன் 1893 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் முதல் ஏழு பேரில் ஆறு பேர் 50 ரன்களுக்கு மேல் அடித்துள்ளனர்.

'தற்போது 130 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து அந்த சாதனையை சமன் செய்துள்ளது. 500 ரன்களுக்கு மேல் அடித்து 5 இற்கு மேல் சராசரி வைத்திருப்பது டெஸ்ட் கிரிக்கெட்டில் இது 4 ஆவது முறையாகும்.

மான் செஸ்டர் டெஸ்டில் இங்கிலாந்து 107.4 ஓவரில் 592 ரன்கள் குவித்தது. சராசரி 5.49 ஆகும். இதற்கு முன், ராவல்பிண்டியில் பாகிஸ்தானுக்கு ஆஸஸ் 4 ஆவது டெஸ்ட்டில் 130 வருட சாதனையை சமன் செய்த இங்கிலாந்து அணிதிராக 2022 இல் இங்கிலாந்து 107 ஓவரில் 657 ரன்கள் குவித்தது.

சராசரி 6.50 ஆகும். அயர்லாந்துக்கு எதிராக லார்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து 82.4 ஓவரில் 524 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. அப்போது ரன்ரேட் 6.33 ஆகும். 2001 ஆம் ஆண்டு கொழும்பில் வங்காளதேசத்திற்கு எதிராக இலங்கை 103.3 ஓவரில் 555 ரன்கள் குவித்தது. சராசரி 5.36 ஆகும். (4)

# 500 ஆவது போட்டியில் சதமடித்தார் விராட்



இந்திய கிரிக்கெட் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் 5 இருபது-20 போட்டிகளில் விளையாடுவதற்காக வெஸ்ட் இண்டீஸ் சென்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையே நடந்த முதல் டெஸ்டில் இந்தியா அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி டிரினிடாடில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, இந்திய அணி முதலில் களமிறங்கியது. தொடக்க வீரர்களான ரோகித் சர்மா, ஜெய்ஸ்வால் ஆகியோர் அரை சதமடித்து அசத்தினர். ரோகித் சர்மா 80 ரன்னும், ஜெய்ஸ்வால் 57 ரன்னும் எடுத்து அவுட்டாகினர். முதல் நாள் முடிவில் இந்தியா 4 விக்கெட் இழப்புக்கு 288 ரன்கள் எடுத்திருந்தது.


விராட் கோலி 87 ரன்னும் ஜடேஜா 36 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்நிலையில், இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. விராட் கோலி சிறப்பாக ஆடி சதமடித்தனார்.

ஜடேஜாவும் அரை சதமடித்தார். 500 ஆவது சர்வதேச போட்டியில் விளையாடும் விராட் கோலி சதமடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2871

**தனுஜா**

கோடு போடுறது மட்டும்தான் எங்க வேலை...
இந்தக் குப்பை எடுக்கிறது
எங்க வேலை இல்லை...



**றொஜேஸ்**




என்னை மறுபடியும் 1990 லேயே இறக்கி விட்டுடுங்க
நாங்க அங்கதான் சந்தோஷமா இருந்தோம்..

**தக்ஷாயினி**

Instagram பாத்தாச்சு, Facebook பாத்தாச்சு,
WhatsApp பாத்தாச்சு, Twitter யும் பாத்தாச்சு...

: இனி என்னத்த பாக்குறது...




திரும்பி என்னைய பாருடா....

**வேக்மன்**

She ~ hii da

He - என்ன மெசேஜ்லாம் வருது 😍

She - நெட் slow டா அதான் மெசேஜ் பண்ணி போகுதான்னு பாத்தேன் bye

He - நான் பாட்டுக்கு சிவனேனு தானடி இருந்தேன் 😔😔



**சுலைக்ஷனா**

அந்தக்காலத்தில கல்யாணத்துல சாப்பிறவங்க
ஒரு இடத்துல இருப்பாங்க... பரிமாறுறவங்க
ஓடிற்று இருப்பாங்க!




இந்த காலத்துல சாப்பிறவங்க ஓடிட்டு இருக்கிறாங்க
பரிமாறுறவங்க ஒரு இடத்துல இருக்கிறாங்க...

**யசோன்**

மஞ்சளா இருக்குற எலுமிச்சைய
பிழிஞ்சா வெள்ளையா சாறு
வருது

வெள்ளையா இருக்குற முட்டைய
உடைச்சா மஞ்சளா கரு வருது

இப்படி தான் வாழ்க்கையும் ...




நாம ஒன்னு நெனச்சா அது
ஒன்னு நடக்கும் 😞

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# தொடரும் வறட்சி காரணமாக குடிநீருக்கு அலையும் நிலை



(கண்டாவளை)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடரும் வறட்சி காரணமாக பல்வேறு இடங்களிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீருக்கு அலையும் நிலை காணப்படுகின்றன.

தற்போது நிலவும் வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுவதுடன் பல்வேறு வகையான பாதிப்புக்களும் காணப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள் குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், கோட்டைகட்டி, துணுக்காய், ஆலங்குளம் ஆகிய பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றன.

அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளிலும் வறட்சி காரணமாக அதிகளவான பாதிப்புகள் காணப்படுகின்றன.

குறிப்பாக அன்றாடத் தேவைக்கான குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி பிரதேச த்தின் பல இடங்களில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் வறட்சி நிலை காரணமாக குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முழங்காவில்,ஜேம்ஸ்புரம், அன்புபுரம் ஆகிய பகுதிகளிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசத்திற்கு உட்பட்ட அக்கராயன்,கோனாவில் போன்ற பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

பூநகரி பகுதியில் உள்ள நீர்நிலைகள் வற்றி காணப்படுவதனால் கால்நடைகளுக்கான குடிநீர் இல்லாத நிலை காணப்படுவதுடன் கால்நடைகள் குடிநீர் தேடி அலையும் நிலை காணப்படுகின்றது. (நி-315)

# பளையிலுள்ள தும்புத் தொழிற்சாலை தீ விபத்தில் முற்றாக எரிந்து நாசம்



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இந்திராபுரம் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தும்புத் தொழிற்சாலை ஒன்று முற்றுமுழுதாக எரிந்து நாசமானதுடன் அதில் இருந்த பல இலட்சம் பெறுமதியான இயந்திரங்களும் எரிந்து நாசமாகி உள்ளதாக தும்புத் தொழிற்சாலை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-316)


உ
குகமயம்

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 38 ஆம் ஆண்டு குருபூசை



இடம்:
சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:
(25.07.2023)
செவ்வாய்க்கிழமை



காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமி அவர்களின் நினைவலைகளுடன் கூடிய அருளுரைகளும் இடம்பெறவுள்ளது.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து குருவருளும் திருவருளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சுபம், சாந்தி.

(16384)

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான்
ஆச்சிரமம்.


# இராசிபலன்

24.07.2023
ஆடி 08, திங்கட்கிழமை
சஷ்டி முற்பகல் 10.31 மணிவரை
அத்தம் முன்னிரவு 7.40 மணிவரை

சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகுகாலம்-7.32 -9.02 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரட்டாதி,உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், மாற்றங்களினால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,மருத்துச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும்.

**ரிஷபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**விருச்சிகம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** தொலைபேசி வழியில் கிடைக்கும் தகவல்கள் மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்,குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்,போசன சுகமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நாம் பிறருக்கு கொடுப்பதிலிருந்து தான் திரும்பப் பெறுகிறோம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு








(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை கறுப்பு ஜூலை நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் பொழுது பல்கலைக் கழகத்தின் பிரதான நுழை வாயிலின் அருகே அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான கொடிக்கம்பத்தில் மாணவர்களால் கறுப்பு கொடி யேற்றப்பட்டு அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. இதனையடுத்து பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்திற்கு மாண வர்களால் ஈகைச் சுடரேற்றப்பட்டதோடு மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது. நினைவேந்தலில் பல்கலைக் கழக மாணவர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (நி-33)

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில் வாகனம் சுவாமிகளின் 38 ஆவது குருபூசை தினம் நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை தொண்டை மானாறு ஆச்சிரமத்தில் இடம் பெறும்.

காலை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு களைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிர மத்தில் சுவாமிகளின் நினைவுகளுடன் கூடிய அருளுரைகளும் இடம்பெறவுள்ளன. (க)



அச்சுவேலி பத்தமேனி வடபத்திர காளியம்பாள் கொடியேற்ற திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டம் கல்மடு சுடலைக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் ஐந்து பேர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் பொலி ஸாரிற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 120 லீற்றர் கசிப்பும் 1685 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் சந்தேகநபர்கள் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எம்.கியான் றோசான் ரணவீரா தெரிவித்துள்ளார். (நி-316)

## சந்தைகளில் நேற்றைய விலை




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 | 500 |
| தக்காளி | 380 | 380 | 360 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 220 | 300 |
| கோவா | 250 | 230 | 280 | 320 |
| கரட் | 350 | 480 | 540 | 600 |
| பூசணி | 160 | 100 | 120 | 150 |
| புடோல் | 150 | 140 | 200 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 140 | 150 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 260 | 350 |
| பீற்றூட் | 160 | 300 | 260 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 280 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 260 | 280 | 320 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 260 | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 40 | 20 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 100 | 100 |

## குடத்தனை பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் பொலிஸாரால் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதி கடற்கரையில் இருந்து ஒரு தொகுதி வெடிபொருட்கள் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி கடற்கரையில் ஆயுதங்கள் புதைத்திருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பருத்தித்துறை பொலிஸாரால் மேற்படி பகுதியில் அகழ்வுப் பணி இடம்பெற்றது. இதன்போது ரி- 56 ரக துப்பாக்கி இரண்டு அதற்கான மகசின் எட்டு அதற்கான தோட்டாக்கள் அடங்கிய பெட்டி ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளன. (நி-60)

### வெள்ளி, ஞாயிறு தினங்களில்

## சில கல்வி நிலையங்களில் கற்றல் நடவடிக்கை

(தருமபுரம்)

பதிவு செய்யப்படாத பல தனியார் கல்வி நிலையங்களில் தொடர்ச்சியாக இரவு- பகலாக கற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பலர் குற்றம்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் அறநெறி வகுப்புக்களில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் எனக் கருதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் பொலிஸ், சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையினர், தனியார் கல்வி நிலைய இயக்குநர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வெள்ளிக்கிழமைகளில் நாள் முழுவதும் ஞாயிற்றுக்கிழமையில் 12 மணி வரை கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்னும் தீர்மானத்தை எடுத்திருந்தனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சுகாதார பரிசோதனைகள் மற்றும் பொலிஸ் பிரதேச சபையினர் உரிய தீர்வினை பெற்றுத் தர வேண்டுமென சில தனியார் கல்வி நிலையங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (நி-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வாழையின் மருத்துவப் பயன்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name: Musa sapientum
Family:Scitaminaceae

வாழையில் 80 இற்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு. அவற்றுள் சில இனங்களே யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படுகின்றன. அவற்றுள் மருத்துவ முக்கியத்துவமுடைய இனங்களாக மருத்துவ வாழை, இதர வாழை, நேத்திரன் வாழை, மொந்தன், கற்பூரவள்ளி வாழை இனங்கள் முக்கியமானவையாகும். 3 மாத வயதுடைய ஈட்டி இலைகளையுடைய கன்றுகள் நடுகைக்கு சிறந்தது. கன்று நட்ட 12-15 மாதங்களில் கால்கள் அறுவடை செய்யலாம்.





### 100 கிராமிலுள்ள சத்துக்கள்

| சத்துக்கள் | கிழங்கு | தண்டு | பூ | காய் | பழம் |
|---|---|---|---|---|---|
| புரதம் (கிராம்) | 0.4 | 0.5 | 1.7 | 1.4 | 1.2 |
| கொழுப்பு (கி) | 0.2 | 0.1 | 0.7 | 0.2 | 0.3 |
| நார்ப்பொருள் (கி) | 1.1 | 0.8 | 1.3 | 0.7 | 0.4 |
| காபோவைதரேற்று (கி) | 11.8 | 9.7 | 5.1 | 14.0 | 27.2 |
| கல்சியம் (மி.கி) | 25 | 10 | 32 | 10 | 17 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 10 | 10 | 42 | 29 | 36 |
| இரும்பு (மி.கி) | 1.1 | 1.1 | 1.6 | 0.6 | 0.9 |
| விற்றமின் (மி.கி) | 1 | 7 | 16 | 21 | 7 |
| கரோட்டீன் (மை.கி) | 16 | 0 | 27 | 30 | 78 |
| மக்னீசியம் (மி.கி) | | | 54 | 33 | 34 |
| பொட்டாசியம் (மி.கி) | | | 185 | 192 | 88 |
| ஒக்ஸாலிக்கமிலம் (மி.கி) | | | 420 | 480 | - |
| போலிக்கமிலம் (மை.கி) | | | | 16.4 | |

**மருத்துவப் பயன்கள்**

வெந்நீர் கொதிக்கும் எண்ணெய் அல்லது தீப்பட்டு உடல் பகுதி வெந்தது போன்ற நிலையில் வாழை இலைக்குருத்தை தளிர் இலையை அவ்விடங்களில் வைத்துக் கட்ட விரைவில் குணமாகும்.

காய்ந்த இலையை தேங்காய் எண்ணெய்யில் குழப்பி தீப்புண் சீழ் ஒழுகும் காயங்களுக்கு தடவப் பயன்படுத்தலாம். கொப்புளங்களின் மீது பச்சை வாழை இலையை வைத்து கட்ட குளிர்ச்சி உண்டாகி விரைவில் ஆறும். வாழையில் உள்ள தண்டை சிறுசிறு துண்டுகளாக்கி நார் போக்கி சமைத்துண்ண சிறுநீர் தாரைகளில் ஏற்படும் கல்லடைப்பைக் கரைக்கும்.

பாம்புக் கடிக்கு வாழைப் பட்டை நீர் அல்லது வாழைத் தண்டின் நீர் 60 - 100 மில்லி வரை அருந்தலாம்.

வாழைத் தண்டை உலர்த்தி, பொடித்து அத்துடன் தேன் கலந்து உட்கொள்ள காமாலை நோய் தீரும். வாழைத்தண்டின் சாற்றை தேள், பூரான் கடித்தால் கடிவாயில் பூச வலி தணியும். வாழைத்தண்டை தடவி வர தீப்புண்கள், சீழ்க் கட்டிகள் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

காய்கள் முதிர்ச்சியடைந்த பின் வாழைப்பூக்களைக் குறுக்காக சிறுசிறு துண்டுகளாக்கி அரிந்து நெய்யில் பொரித்து உட்கொள்ள அஜீரணம் தீரும். குளிர்ச்சியை கொடுக்கும். பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாட்டிற்கு வாழைப்பூ சாறுடன் தயிர் கலந்து அருந்தலாம். பூச்சாற்றை பனங்கற்கண்டுடன் சேர்த்து கொடுக்க சீதபேதி தீரும்.

வாழைப்பூவை கருணைக் கிழங்கு, பாசிப்பருப்பு இவற்றுடன் சேர்த்து கூட்டு அல்லது பொரியல் செய்து சாப்பிட மூல நோய் தீரும்.

வாழைப்பூவுடன் பருப்பு சேர்த்துண்ண ஆசனக்கடுப்பு, கை, கால் எரிச்சல் தீரும், மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்த போக்கையும் வலியையும் குறைக்க வேக வைத்த வாழைப்பூவுடன் தயிர் சேர்த்துண்ண வேண்டும்.

உடல் பருமனுள்ளவர்கள் வாழைப்பழத்தில் பசுப்பால் சேர்த்து பிசைந்து வாழைப்பூவின் சாற்றையும் கலந்து தினம் ஒரிருமுறை அருந்த உடற்பருமன் குறையும்.

வாழைக்காயை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி மிளகுப்பொடி, உப்பு ஆகியவற்றின் கலவையில் பிசைந்தெடுத்து பசு நெய்யில் வறுத்துண்ண சீதபேதி குணமாகும். இரத்த விருத்தியுண்டாகும். வாழைக்காயை வேக வைத்து அத்துடன் பாகற்காய்ச்சாறு சேர்த்து சாப்பிட்டால் நீரிழிவு நோய் குணமாகும்.

வாழைக்காயின் தோலை தண்ணீரில் நன்கு காய்ச்சி குடிநீர் தயாரித்து சீனி கலந்து அருந்தினால் சிறுநீர் நன்கு வெளிப்படும். பழுத்த பழங்கள் வெகுவிரைவில் சீரணமாகும். மலச்சிக்கலை நீக்கும்.

ஒன்றாக பழுத்த பழங்களை குழைய கரைத்து மோருடன் சேர்த்து சாப்பிட உள்ளங்கால், கை, கண் எரிச்சல் தீரும். பாலில் நன்கு பழுத்த பழத்தை போட்டு வேக வைத்து குழைத்து கலக்கி சாப்பிட மூல நோய் தீரும். கசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப்பழத்துடன் தயிர், தேன் சேர்த்து இளநீர் கலந்து குழைத்து சாப்பிட்டால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

வாழைப்பழத்துடன் சிறிது தேன்கலந்துண்ண அம்மை, நெருப்புக் காய்ச்சலினால் ஏற்படும் உபத்திரங்கள் தணியும் வாழைக் கிழங்கை இடித்து சாறு எடுக்க வேண்டும். அச்சாற்றை வடிகட்டி எடுக்க வேண்டும் இதில் வேளைக்கு 50 முதல் 100 மில்லி வரை அருந்த வேண்டும்.

இதனால் சிறுநீர் தடையின்றி பிரிந்து அடிவயிறு வீக்கம் தணியும். வயிற்றுப்புண் ஆறும், உடல் குளிர்ச்சியடைந்து வலிமை பெறும். வாழைக்கிழங்கை இடித்துச் சாற்றை எடுத்துவிட்டு சக்கையை அடிபட்ட வீக்கங்கள் மீது வைத்துக்கட்டினால் வீக்கம் வடியும்.

வாழைப்பூ, பிஞ்சு, காய், பழம், இலைப்பட்டை, கிழங்கு, வாழைத்தண்டு வாழைப் பூவின் மருத்துவ குணங்களை நோக்கின் காய்கள் முதிர்ச்சியடைந்த பின்பு வாழைப் பூவினை வெட்டி பயன்படுத்த வேண்டும்.

கொத்தின் மடல்களை ஒவ்வொன்றாக நீக்கி அதிலுள்ள பூக்களை தனித்து எடுக்க



வேண்டும். அதில் சவ்வு போன்ற பூ வெளிப்பகுதியையும் கசக்கும் தன்மையுள்ள பெண் பாகங்களையும் நீக்கிவிட்டுப் பூக்களை குறுக்காக சிறு சிறு துண்டுகளாக அரிந்து பயன்படுத்த வேண்டும். இதனை வேக வைத்து பொரியச் செய்து சாப்பிட்டால் அஜீரணம், நீரிழிவு நோய் நீங்கும். வாழைப் பூக்கள் குளிர்ச்சியை உண்டாக்கும். வயிற்றுப்புழுக்களை அழிக்கும்.

மாதவிடாய் இரத்தப்போக்கு கூடுதலாக இருந்தால் பூச்சாறு 30 மில்லியுடன் தயிர் 20 மில்லி கலந்து காலை, மாலை தொடர்ந்து 5 நாட்கள் அருந்தலாம்.

பூச்சாறு 60 மில்லியுடன் 10 கிராம் பனங்கற்கண்டு சேர்த்துக் கொடுக்க வெள்ளை சாய்தல் தீரும். நெருப்பு சுட்ட புண் மீது தடவலாம். வாழைப் பூவை உளுந்துடன் சேர்த்து வடை செய்து சாப்பிட்டு வர உடல் பலம் பெறும். குடல் புண்ணும் குணமாகும்.

உடற்பருமன் உள்ளவர்கள் வாழைப்பழத்தில் பசுப்பால் சேர்த்து பிசைந்து 30 மில்லிக்கு 30 மில்லி வாழைச்சாறு கலந்து தினமும் 40 நாட்கள் காலையில் தொடர்ந்து அருந்தி வர மிருசதை குறையும்.

பூவை இடித்து ஆமணக்கு எண்ணெய்யில் வதக்கி கை, கால்களுக்கு ஒத்தடம் கொடுப்பதுடன் அதனையே எரிச்சலுக்கும் வைத்துக் கட்டலாம். வாழைப்பூவை வாரத்திற்கு ஒரு முறையேனும் சமைத்து சாப்பிடுதல் அவசியமாகும்.

**வாழைத்தண்டு :-**

வாழையின் உள் தண்டை சிறு சிறு துண்டுகளாக்கி நார் போக்கி சமைத்துண்ண சிறுநீர் எரிச்சல், கல்லடைப்பு நீங்கும். வாழைத்தண்டை சாப்பிட்டு வர குளிர்ச்சி உண்டாகும். தாகமும் தணியும்.

விஷக்கடிக்கு வாழைத் தண்டுச் சாறு 60 மில்லியளவு காலை, மாலை நச்சுக்குருதிக் குணம் குறையும் வரை குடிக்க கொடுக்கலாம். வாழைத் தண்டை அடிக்கடி சமைத்து சாப்பிட வயிற்றுக் கோளாறுகள் குணமாகும்.

வாழைத்தண்டு சாறு 600 மில்லி காலை, மாலை அருந்த கல்லடைப்பு முற்றாக நீங்கும். வாழைத்தண்டுச்சாறு எடுத்து மண் சட்டியில் ஊற்றி சுட வைத்து 30 மில்லி குடித்தால் நீர்க்கடுப்பு நீங்கும்.

வாழைத்தண்டுச்சாறு, அறுகம்புல் சாறு 30 மில்லி வீதம் ஒன்றாகக் கலந்து ஒரு நாள் விட்டு ஒருநாள் குடித்து வந்தால் உடல் எடை குறைந்து மேனி அழகாகும்.

வாழையில் பல இனங்கள் உண்டு. ஆனால் மொந்தன், நேத்திர வாழையின் பூக்கள், தண்டுகளுக்கு மருத்துவ குணங்கள் அதிகம் உண்டு. இவை கிடைக்காதவிடத்து மற்றைய வழை இன பூக்கள், தண்டுகளையும் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 237





என் காதுக்கு வந்தது இந்தப் பெயர்கள் தான். வேறு பலரும் வந்திருக்கலாம்."

"வந்திருக்கட்டும் அதனால் என்ன? எல்லாரும் நடுநிசி வரையில் கூத்தும் கேளிக்கையும் பார்த்து விட்டு, வயிறு புடைக்கச் சாப்பிட்டு, அதற்கு மேல் மிடா மிடாவாய்க் கள்ளைக் குடித்து விட்டுத் தூங்கப் போயிருப்பார்கள். அதைப் பற்றி நமக்கு என்ன. நீங்கள் சொன்ன தாடி மீசை நரைத்த கிழடுகள் எல்லாம் கூடிப் பேசி என்ன புரட்டி விடுவார்கள்?"

"கிழடுகளைப் பற்றி உனக்கு இவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருக்கும் பட்சத்தில் நான் என்ன சொல்லி என்ன பயன்? நானும் ஒரு கிழவன் தானே? அவர்கள் எல்லாரையும் விடத் தொண்டு கிழவன் நான்..!"

"தாத்தா! கோபம் வேண்டாம். அந்தக் கையினாலாகாத கிழங்களோடு தங்களை நான் சேர்த்து விடுவேனா? சரி, அப்புறம் என்ன நடந்தது, சொல்லுங்கள்!"

"கையினால் ஆகாக் கிழங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறாய்! அவர்களில் தலைமைப் பெரிய கிழவன் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கல்யாணம் செய்து கொண்டான் என்பதை மறந்து விடாதே! இளம் பெண்ணை மணந்த கிழவனைப் போல் உலகில் அபாயகரமான இளைஞன் யாரும் இல்லை என்பதையும் தெரிந்து கொள்"

கிழவனின் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு தொடங்கியதும் ஆதித்தகரிகாலனுடைய முகத்தில் ஒரு விசித்திர மாறுதல் உண்டாகியது. அவனுடைய கண்கள் திடீரென்று சிவந்து இரத்த பலி கேட்கும் க்ஷுத்ர தேவதையைப் போல் விழித்தன. உதடுகள் துடிதுடித்தன. ப்ற்கள் நறநறவென்று கடித்துக் கொண்டன.

இதையெல்லாம் மலையமான் கவனிக்கவில்லை. ஆனால் பார்த்திபேந்திரன் கவனித்துக் கொண்டான்.

"அந்தக் கல்யாணப் பேச்சு இப்போது என்னத்துக்கு, ஐயா! சம்புவரையர் அரண்மனையில் அப்புறம் என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்" என்றான் பல்லவ வீரன்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். ஆனால் வயதாகிவிட்டது அல்லவா? புத்தி தடுமாறி வேறு எங்கேயோ போய் விடுகிறேன்.கேள் கரிகாலா! பார்த்திபேந்திரா. நீயும் கேட்டுக் கொள். அந்த நள்ளிரவுக் கூட்டம் கிழவர்களின் கூட்டம் மட்டும் அல்ல. சில வாலிபர்களும் அதில் இருந்தார்கள். ஒருவன் சம்புவரையன் மகன் கந்தமாறன். இன்னொருவன். என்று தயங்கினதைப் பார்த்து, "யார், தாத்தா? இன்னொருவன் யார்?' என்று கரிகாலன் தூண்டிக் கேட்டான்.

"உன்னுடைய பெரிய பாட்டனார் கண்டராதித்தருடைய திருக்குமாரன்,. உன்னுடைய சித்தப்பன் மதுராந்தகத் தேவன்தான்"

இதைக் கேட்டதும் ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் கலகலவென்று சிரித்தார்கள்.

"இது என்ன சிரிப்பு. இந்தச் சிரிப்புக்குப் பொருள் என்ன? மறுபடியும் என்னைப் பரிகசிக்கிறீர்களா?" என்று மிலாடுடையார் கேட்டார்.

"இல்லை, தாத்தா. இல்லை. மதுராந்தகனைத் தாங்கள் 'வாலிபன்' என்கிறீர்களே? அதற்காகத்தான் சிரிக்கிறோம். அவன் கிழங்களிலேயெல்லாம் தொண்டுக் கிழடு அல்லவா? பழுத்த சிவஞானக் கிழடு அல்லவா?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"கிழவனுக்குச் சில சமயம் யௌவனம் திரும்பும் என்று நீ கேள்விப்பட்டது இல்லையா? அதுபோல் மதுராந்தகனுக்கும் இளமை திரும்பியிருக்கிறது. சில நாள் முன்பு வரையில் 'துறவியாகப் போகிறேன் சிவ கைங்கரியம் செய்யப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவன், ஒன்று, இரண்டு, மூன்று என்று கல்யாணம் செய்து கொண்டு போகிறான் அல்லவா?"

"செய்து கொள்ளட்டும். இன்னும் பல கல்யாணம் செய்து கொள்ளட்டும் அதனால் என்ன?"

"தம்பி! மதுராந்தகனின் கல்யாணங்கள் சாதாரண கல்யாணங்கள் அல்ல. இராஜரீகக் கல்யாணங்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிட்டுக்குருவியின் கர்வம்



ஒரு கடற்கரையின் அருகில் உள்ள செடியில் இரண்டு சிட்டுக்குருவிகள் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. முட்டையிடும் பருவம் வந்ததும் பெண் சிட்டுக்குருவி, ஆண் சிட்டுக்குருவியிடம் இந்த கூடு பாதுகாப்பானது தானா? என்று கேட்டது.

இந்தக் கூடு பாதுகாப்பானதுதான் என்றது. ஆண் சிட்டுக்குருவி, அருகில் கடல் இருக்கிறதே! அது பொங்கி வந்தால் நம் முட்டைகள் அழிந்துவிடுமே! என்றது பெண் சிட்டுக்குருவி, இந்தக் கடலுக்கும் என்னிடம் பகை கொள்ளும் அளவுக்குத் துணிவில்லை என்றது கர்வமாக.

அதற்கு அறிவுரை கூறும் வகையில் பெண் சிட்டுக்குருவி, உனக்கும் கடலுக்கும் வேறுபாடு இருக்கிறது. அதன் வலிமையை உன் வலிமையோடு ஒப்பிடுவது தவறு என்றது.

இரண்டொரு நாட்களில் கடல் பொங்கி வந்தது. கூட்டிலிருந்த முட்டைகளை அடித்துக்கொண்டு சென்றது. இதைக் கண்ட பெண் சிட்டுக்குருவி பதறியது.

அதற்கு ஆறுதல் கூறி ஆண் சிட்டுக்குருவி நீ கவலைப்படாதே! முட்டைகளை நான் மீட்டுக் கொண்டு வருவேன் என்று உறுதியளித்தது.

ஆண் சிட்டுக்குருவி, பறவைகளின் ராஜாவான கருடனிடம் சென்று முறையிட்டது.

கருடராஜா தன் இறைவனாக ஸ்ரீ விஸ்ணுவிடம் அறிவித்தார். ஸ்ரீ விஸ்ணு சிட்டுக்குருவியின் முட்டைகளைத் திருப்பிக் கொடுத்து விடுமாறு கடலுக்குக் கட்டளையிட்டார்.

இறைவனின் கட்டளைக்குப் பணிந்த கடல் அந்தச் சிட்டுக்குருவியின் முட்டைகளை மீண்டும் அதன் கூட்டில் கொண்டு வந்து வைத்தது.

நீதி: எவன் ஒருவன் தன் வலிமையையும், மற்றொருவரின் வலிமையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறானோ அவன் துன்பப்படுவதில்லை. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்காதவன் அழிவையே சந்திக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பத்தாம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சை

ஒரு காலத்தில் இந்த நாட்டின் அரச தீர்மானங்களில் தமிழ்ப் புத்திஜீவிகளின் வகிபங்கு கணிசமாக இருந்தது.

கல்வி, நிதி, சட்டம், வெளியுறவுக் கொள்கை, விவசாயம் என பல துறைகளிலும் தமிழ்ப் புத்திஜீவிகளும் நிர்வாகிகளும் பொறுப்பான பதவிகளில் இருந்து காத்திரமான ஆலோசனைகளை வழங்கி, திட்டங்களை – கொள்கைகளை வகுத்தனர்.

ஆனால் தமிழ்த் தரப்புகளை ஓரங்கட்ட வேண்டும் எனக் கருதிய ஆட்சியாளர்கள் நாட்டுக்கு நன்மை தரும் ஆலோசனைகளைத் தர்வல்ல தமிழ் அறிஞர்களை புறந்தள்ளினர்.

இதன் காரணமாகவும் இந்த நாடு இப்போது ஆற்றலைகிறது.

ஆம், பத்தாம் தரத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதென்ற தீர்மானத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு பரிந்துரைத்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லது பத்தாம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதன் மூலம் உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக படிப்பை விரைவாகப் பூர்த்தி செய்யவும் அவ்வாறு பூர்த்தி செய்தவர்கள் இளம் வயதில் தத்தம் தகைமைக்கேற்ப முயற்சியாண்மையில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு பத்தாம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சையை நடத்த வேண்டும் என்ற கருத்தை கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலில் வலியுறுத்திக் கூறியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்.

கல்வி சார்ந்து வழங்குகின்ற கருத்துரைகளில் இந்த விடயத்தை அவர் வலியுறுத்தி வந்தார்.

உலக நாடுகளின் கல்வி முறைமைகளைச் சுட்டிக்காட்டிக் கருத்துரைக்கும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், எமது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

க.பொ.த சாதாரண தரத்தை எட்டுவதில் கணிசமான காலம் செலவிடப்படுகிறது.

உண்மையில் பத்தாம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சையை நடத்தி ஒரு வருடத்தை மீதப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் உயர்தரத்திலும் பல்கலைக்கழகத்திலும் குறைந்த வயதில் படிப்பை நிறைவு செய்வதனூடு தரமான மனித வளத்தை நாடு பெற முடியும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தி வந்தார்.

எனினும் அன்று பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறிய கருத்து உரியவாறு அரசாங்கத்தால் உள்ளீர்க்கப்பட்டிருக்குமாயின், அந்த நல்ல திட்டம் குறைந்தது ஏழு வருடங்களுக்கு முன்னரே அமுலாகியிருக்கும்.

என்ன செய்வது தமிழ்ப் புத்திஜீவிகளின் கருத்துக்கள், ஆலோசனைகளை ஆட்சித் தரப்பு செவிசாய்க்காததன் காரணமாக, எதையும் காலம் தாழ்த்திச் செய்கின்ற நிலைமை நம் நாட்டின் தலைவிதியாயிற்று.

பரவாயில்லை. இனியேனும் மேற்குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி 10ஆம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சையை நடத்தி, கற்றல் செயற்பாட்டில் மாணவர்களை விரைவுபடுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது சவாலுக்குரியது

## நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

நாட்டில் மீண்டுமொரு கறுப்பு ஜூலை சம்பவம் தோற்றம் பெறாத கட்டமைப்பை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். 1983 கறுப்பு ஜூலை சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது சவாலுக்குரியதாக காணப்படுகிறது.

ஒருசில அரசியல்வாதிகள் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை தோளில் சுமந்து இனக் கலவரத்தை தோற்றுவித்தார்கள் என நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனநாயக சீர்த்திருத்தங்களுக்கான மக்கள் இயக்கம் "மீண்டுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்திருந்த கூட்டு பேச்சுவார்த்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள கொப்பே கடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கறுப்பு ஜூலை சம்பவம் இடம்பெற்று 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள பின்னணியில் பல விடயங்கள் கடுமையாக தாக்கம் செலுத்தியுள்ளது. கறுப்பு ஜூலை சம்பவத்தை துரதிஷ்டவசமானதாக கருத வேண்டும்.

பிரித்தானியர் ஆட்சி காலத்தில் இருந்து அரசியலமைப்பு ஊடாக இனவாரி ரீதியில் மக்கள் வேறுபடுத்தப்பட்டார்கள், பிரதேசவாரியாக மக்கள் வேறுபடுத்தப்பட்டார்கள். மக்கள் மத்தியில் இனவாதம் தோற்றம் பெறுவதற்கு அது ஆரம்பமாக இருந்தது.

சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த ஒருசில அரசியல்வாதிகள், அரச தலைவர்கள் இனவாதத்தையும் மதவாதத்தையும் தோளில் சுமந்து கொண்டு சென்றார்கள். இதனால் இலங்கையில் வாழ்ந்த மக்கள் இலங்கையர் என்ற அபிமானத்துடன் வாழ முடியாமல் போனது என மேலும் தெரிவித்தார். (4-7)

# மரக்கறி விதை இறக்குமதி விரைவில் நிறுத்தப்படும்

## விவசாய அமைச்சு

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் மரக்கறி விதைகள் இறக்குமதியை 100 வீதத்தால் நிறுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயிர்ச் செய்கைக்கு தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தை விவசாய திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயிர்ச் செய்கைக்குத் தேவையான மரக்கறி விதைகள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுவதால், இறக்குமதி செய்யப்படும் விதைகளுக்கு விவசாயிகள் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக மரக்கறிச் செய்கையின் மூலம் போதிய வருமானத்தைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த விடயத்தை கருத்திற் கொண்டு நாட்டின் பயிர்ச்செய்கைக்கு தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு விவசாய அமைச்சர், திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (4-7)

# சட்டவிரோத மாடறுப்பில் ஈடுபட்ட மூவர் கைது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு-இறுப்பிட்டி பிரதேசத்தில் சட்டவிரோதமாக பசுக்கன்று வெட்டப்பட்ட நிலையில் தீவக சிவில் சமூக உறுப்பினர்களால் நேற்று மூவர் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து குறித்த மூவரும் ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக இப்பகுதியில் தங்கியிருந்து கால்நடைகளை திருடி இறைச்சியாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (4-7)

# நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி பலி

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கடற்கரையில் நீராடச் சென்ற 3 இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கொஸ்லாந்தை, டயகம மற்றும் சுன்னாகம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சத்திய மூர்த்தி சிறிவிந்த் (21), வடிவேல் ஆனந்த குமார் (23) மற்றும் ஜெயதீஸ்வரன் ஜெயலக்ஷ்மன் (23) ஆகிய மூவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நேற்று 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.45 மணியளவில் நீராடச்சென்ற 3 பேரும் காணாமல் போயுள்ள நிலையிலேயே உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞர்களுடன் நீராடச் சென்ற மற்றுமொரு இளைஞன் இது தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** மண்கும்பான் நீர்ப்பாசனசபை, மண்டைதீவுகடற்படைமுகாம், அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, மண்டைதீவு , மண்கும்பான், மண்கும்பான்விடுதியடி, பூம்புகார் வெண்புரவிநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# லொறி மீது ரயில் மோதி விபத்து

## இருவர் படுகாயம்

வவுனியா - திருநாவற்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புகையிரத விபத்தில் லொறி சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கடுகதி புகையிரதம், வவுனியா - திருநாவற்குளம் 3ஆம் ஒழுங்கை பகுதியில் வைத்து, புகையிரத கடவையை கடக்க முயன்ற லொறி மீது மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் லொறியில் பயணித்த சாரதியும் மற்றொருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

அதனையடுத்து, காயமடைந்த இருவரையும் பொதுமக்கள் மீட்டு, வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இவ்விபத்தில் தாண்டிக்குளம் பகுதியை சேர்ந்த இருவரே காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

(4,7,250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

23


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவ்வாறு சர்வதேச வர்த்தகத்தின் போது கொடுக்கல்- வாங்கலுக்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க, உரோம, சீன, அரேபிய மற்றும் இந்திய நாணயங்கள் பலவும் அநுராதபுரம், மிகிந்தலை, சிகிரியா, குருணாகல், மாத்தறை, அகுருகொட மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### அநுராதபுர யுக காலத்தில் புழக்கத்தில் இருந்த உரோம நாணயங்கள்

உரோம நாணயங்கள் மற்றும் உரோம நாணயங்களின் சமகால உள்ளூர் உரோம சாயல்கள் கொண்ட நாணயங்கள் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கி குறைந்தது நான்கு நூற்றாண்டுகளுக்கு இலங்கையில் பரவலான புழக்கத்தில் இருந்தன. உரோமிற்கும் சீனாவிற்கும் இடையிலான கடல்சார் வர்த்தகப் பாதையில் இலங்கை அமைந்திருந்ததுடன், இந்த நீண்டகாலப்பகுதியில் உரோமானியர்களுடன் நகைகள், முத்துக்கள், கற்பூரம், வாசனைப் பொருட்கள் மற்றும் கருங்காலி போன்ற பல பொருட்களை இலங்கை வர்த்தகம் செய்தது.



உரோமன் நாணயம் - 1

படம்- cbsl.gov.lk

உரோமானிய வரலாற்றாசிரியர் பிளினி தி எல்டர் அவர்களின் கருத்துப்படி, சந்திரகுமாசிவாவின் (44-52AD) ஆட்சியின் போது தப்ரோபேனின் (இலங்கை) நான்கு தூதர்கள் உரோமுக்கு அனுப்பப்பட்டதாகவும், அந்த நேரத்தில் சில இலங்கை வர்த்தகம் தொடங்கியிருக்கலாம் என்றும் பதிவு செய்துள்ளார்.

செம்பு அல்லது வெண்கல உரோமானிய நாணயங்களின் பெரிய புதையல்களும் மற்றும் சமகால இந்தோ-ரோமன் சாயல்கள் நாணயங்களின் புதையல்களும் இலங்கையில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1987 இல் சிகிரியாவில் ஒரு பெரிய புதையல் கண்டுபிடிக்கப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இத்தகைய நாணயங்களைக் கண்டெடுக்க இயலுமாயிருந்ததன் மூலம் அத்தகைய நாணயங்கள் இந்நாட்டில் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. நாணயங்களில் பெரும் பகுதி கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டுகளுக்குரியவையாக இருக்கின்றன.

### 1980 களில் அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய உரோம நாணயங்கள்

பண்டைய உரோமானிய நாணயங்கள் 1980 களில் இலங்கைத் தீவின் தெற்குப் பகுதியான ருகுணுவில் உள்ள அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்டன. 1990 களிலும் அக்குருகொடையில் பல உரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



சுருக்கமாச் சொல்லின் அக்காலத்தில் உரோம பேரரசுக்கும் எமது நாட்டுக்கும் மத்தியில் பெருமளவு வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளமை இதன் மூலம் தெளிவாகின்றது.

அதேபோன்று இந்த நாணயங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதால் தேய்வடைந்துள்ள இயல்பைக் காணக்கூடியதாக உள்ளது.

சர்வதேச வர்த்தகத்தின் மூலம் கிடைத்த உரோம நாணயங்களுக்கு மேலதிகமாக எமது நாட்டிலும் உரோம நாணயங்கள் வார்க்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்தகைய பெருந்தொகையான நாணயங்கள் மாத்தறை நாவிமன பிரதேசத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிகிரியா மற்றும் அநுராதபுரம் அகழ்வுகளின் மூலம் இந்த இரண்டு வகைகளுக்குமுரிய அதாவது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உரோம நாணயங்கள் மற்றும் உரோமப் பேரரசில் தயாரிக்கப்பட்ட உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு வகை நாணயங்களுக்குமிடையே காணக்கூடியதாயுள்ள பிரதானமான வேறுபாடு யாதெனில், உரோமத்தில் தயாரிக்கப்பட்ட நாணயங்களில் காணப்படுகின்ற ஆங்கில எழுத்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நாணயங்களில் காணப்படாமையேயாகும். அதற்குப் பதிலாக பல்வேறு வடிவங்களிலான சிறிய கோடுகள் நாணயங்களில் சேர்க்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

### இலங்கையில் புழக்கத்தில் இருந்த சீன நாணயங்கள்

இந்த நாணயங்கள் செப்பு மற்றும் அதிகளவு செப்புக் கலக்கப்பட்ட உலோகங்களால் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காலகட்டத்திலும் தயாரிக்கப்பட்ட நாணயங்கள் பல்வேறு அளவுகளைக் கொண்டுள்ளன. வட்ட வடிவிலான இந் நாணயங்களின் மத்தியில் சதுரக் கட்டமொன்று துளையாக அமைக்கப்பட்டிருக்கும். அதன் நான்கு பக்கங்களிலும் சீன வரைகோட்டு எழுத்துக்களால் சீனப் பேரரசரின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். நாணயத்தின் மறுபுறம் எந்தவொரு வரைபடமோ, எழுத்தோ காணப்பதற்கு இருக்காது.

### இலங்கையில் புழக்கத்தில் இருந்த அரேபிய நாணயங்கள்

இந்த நாணயங்கள் செப்பு, வெள்ளி ஆகிய உலோகங்களின் மூலமே தயாரிக்கப்பட்டுள்ளன. நாணயங்களின் முகப்பில் அரேபிய மொழியில் பக்தி வாசகர்கள் குறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் மறுபுறம் அவை வெளியிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

### 333-375 காலப்பகுதியில் இலங்கையில் பாவனையில் இருந்த சமுத்ரகுப்தன் அரசரின் இந்திய தங்கதின்னர்

நாணயத்தின் முகப்பில் உத்தியோகபூர்வ சின்னங்கள் மற்றும் எழுத்துக்களால் சூழப்பட்ட சமுத்திரகுப்தன் நிற்பதைக் காட்டுகின்றது. இதன் பெறுமதி ஒரு தங்கதினார் ஆகும். பின்புறத்தில் லட்சுமி தேவி சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இந்த நாணயங்களில் உள்ள லக்ஷ்மியின் உருவம், இலங்கை கஹாவனத் தொடர் நாணயங்களின் தலைகீழ் மாற்றத்திற்கான தூண்டுதலாகக் கூறப்படுகிறது. மேலும் இது இந்தியாவுடனான வர்த்தகத்தின் போது அவ்வப்போது இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பல இந்திய நாணயங்களில் ஒன்றாகும்.

### இலங்கையில் பாவனையில் இருந்த பல்லவர் அரசின் நாணயங்கள்

ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மானவண்ண அரசருடன் தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அக்கபோதி IX உடன் முடிவடையும் பொம்மலாட்ட சிங்கள அரசர்களின் ஆட்சியை ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு இலங்கையைக் கட்டுப்படுத்திய தென்னிந்திய மன்னர்கள் பல்லவர்கள் ஆவார்.

(தொடரும்...)



சீன நாணயம் - 1

படம்- cbsl.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 162 கிலோ...

இந்த கைது நடவடிக்கை கடற் படையால் முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து மேலதிக விசாரணை கள் கடற்படையால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. (4-7,104,316)

## பாணின் விலை...

றும் சேவைகள் திணைக்களம், நுகர் வோர் விவகார அதிகார சபையுடன் இணைந்து, தேவையான எடையில்பாண் விற்கப்படுவதை உறுதி செய்ய சோத னைகளை நடத்துவதற்கான அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. (4-7)

## உணர்வெழுச்சி...

வெளிச்சியுடன் இடம்பெற்றன.

இதன்போது, படுகொலை செய்யப் பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் தூவியும் மெழுகுதிரி ஏற்றியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (4-7)

## அடுத்த அரசாங்...

கொண்ட கட்சி எனத் தெரிவித்த அமைச் சர், மொட்டு ஒருபோதும் கொலை காரக் கட்சி அல்ல என்றும், நாங்கள் நாட்டுக்காக உழைத்த கட்சி என்றும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அத் தனகல்ல தொகுதிக் குழுக் கூட்டத் தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அமைச்சர் பிரசன்ன ரண துங்க இதனைக் குறிப்பிட்டார். (4-7)

## யாழில்...

விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

கந்தபுரம் பகுதியைச் சேர்ந்த தாமோ தரம்பிள்ளை நவரத்தினராசா (வயது 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

இது குறித்து யாழ்ப்பாண பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்ட னர். (4-7,104)

## கல்வியங்காட்டில்...

கல்வியங்காடு சட்டநாதர் கோவில் அருகே உள்ள குறித்த வீட்டில் தங்கி நின்று வீட்டுப் பணி புரிந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று வீட்டில் தங்கி யிருந்த குடும்பத்தினர் நிகழ்வொன் றுக்கு சென்று விட்டு திரும்பி வந்து பார்க்கையில் குறித்த சிறுமி தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டுள்ளார்.

சிறுமி வீட்டார்களுடன் கதைப்பதை வீட்டு உரிமையாளர் தடுத்ததுடன் பல்வேறு நெருக்கடிகளை வழங்கிய தால் ஏற்பட்ட மன அழுத்தம் காரண மாகவே குறித்த சிறுமி உயிரிழந்துள்ள தாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் அறியமுடிகிறது.

குறித்த சிறுமியை பார்க்க யாரும் வரக்கூடாது என்று தெரிவித்த வீட்டு உரிமையாளர் மாதத்தில் ஒருமுறை மாத் திரம் கதைக்கமுடியுமென தெரி வித்த தாக சிறுமியின் உறவினர்கள் குற்றஞ் சாட்டுவதுடன் இவ் உயிரிழப்பில் மர்மம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலத்தை பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (4-7,33,104)

## டொலரின்...

யானது இப்படியே தொடருமானால் டொலரின் மதிப்பு 400 ரூபாயை விட அதிகரிக்கும் என பேராதனை பல் கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

யார் எதைக் கூறினாலும் பொருளா தாரத்தை கட்டியெழுப்ப வேண்டு மாயின் உள்ளூர் தயாரிப்புகள் மூலம் உள்ளூர் வருமான பொருளாதாரத்தை யும், அந்நிய செலாவணி கையிருப்பு மூலம் வெளிநாட்டு பொருளாதாரத் தையும் கட்டியெழுப்ப வேண்டும்.

பொருளாதாரச் செயற்பாடுகளை வெறும் பேச்சளவில் மாத்திரம் வைத் திருந்தால் எதிர்காலத்தில் கடுமை யான பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

## 35 ரூபாய்க்கு...

இறக்குமதி செய்யப்பட்ட முட்டை கள் சந்தையில் இதுவரை விற்பனை செய்யப்படவில்லை எனவும், முட்டையின்விலை அதிகரிப்பை கருத் தில் கொண்டு நுகர்வோருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சதொச மற்றும் பல பொருள் அங்காடிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. (4-7)

## வன்முறைக்...

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதி காலையில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

முகத்தை மூடிக்கட்டிக் கொண்டு திடீரென உள்நுழைந்த கும்பல், அங் கிருந்தவர்களை சரமாரியாக வெட்டி யதுடன், அனைவர் மீதும் பெற்றோல் ஊற்றியுள்ளனர்.

அத்துடன் "சுகந்தன் எங்கே" என தேடியபடியே இந்த கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவத்தின்போது வீட்டின் மேல் மாடியில் இருந்த சுகந்தன் என்ற குடும் பஸ்தர் கீழே இறங்கி வந்த நிலையில், அவரை வெட்ட முயல்கையில் கணவனை காப் பாற்ற குறுக்கே சென்ற 21 வய தான மனைவியும் சரமாரியான வெட்டுக் காயங் களிற்கு உள்ளா னார்.

பின்னர் அவர் கள் மீதும் வீட்டின் மீதும் பெற்றோல் ஊற்றி தீ மூட்டப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதில் 21 வய தான பாத்திமா என்ற மனைவி உயிரிழந்த நிலை யில் கணவன் ஆபத்தான எரி காயங்களிற்கு உள்ளானார்.

2 வயதுடைய சிறுவன் மற்றும் 7, 8, 13 ஆகிய வயதுடைய மூன்று சிறுமிகள், 19 முதல் 41 வய துக்கு இடைப் பட்ட நான்கு பெண் கள், 42 வயது டைய ஆண் மற் றும் 36 வயது டைய ஒருவரும் தீயில் சிக்கி காய மடைந்துள்ளனர்.

சம்பவம் இடம் பெறுவதற்கு முன்னர் வீட்டின் முன்பாக இனந் தெரியாத நபர் கள் நடமாடித் திரி வதை வீட்டின் உரிமையாளர் அவதானித் திருந்ததாக தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த வீட்டில் வசிக்கும் சிறுமி ஒருவருக்கு பிறந்தநாள் நிகழ்வொன்றும் சிறியள வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அப்பிறந்தநாள் கொண்டாட்டத் தின்போதே இந்த தாக்குதல் மற்றும் உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த நபர்களுக்கு வவு னியா மாவட்ட பொது வைத்தியசாலை யில் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ள மையுடன் சந்தேகத்தின் பேரில் சில ரிடம் விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அதனைத்தொடர்ந்து தடயவியல் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து விசாரணை களை மேற்கொண்டமையுடன் திடீர் மரணவிசாரணை அதிகாரி ம.கோகுல் சங்கர் சம்பவ இடத்திற்கு சென்று தடயங்களை பார்வையிட்டார். (4-7,250)


மெகா பவர்
திகதி 23/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1532
A 25 01 56 60 64
09302

லக்கி 7 (Lucky 7)
திகதி 23.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 010
L7 இலக்கம் 0 1
மகரம் 7 9 3 8 9 0

தன நிதானய
திகதி - 2023.07.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1214
G 51 65 68 70 G

கொவிசெத
திகதி 2023.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 3426
X 09 14 33 38
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 493
கடகம் 11 15 25 38 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2023/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 5184
Y 9 6 5 7 0 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2158
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.23
தினம் ஞாயிற்றுக்கிழமை
09 11 23 33 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,890,812.40
"இரண்டாம் வரம்" 04 20 52 60 D
DLB

சனிதா
திகதி 2023.07.23 வெற்றி வாரம் 4319
05 30 45 46 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,968,260.00
"இரண்டாம் வரம்" 44 47 65 66 G
DLB

சசிரி
வெற்றி வாரம் 353
2023.07.23
கபிலம்
07 33 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,250,680/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3870
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.23
தினம் ஞாயிற்றுக்கிழமை
09 14 32 36 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,941,680/-
"இரண்டாம் வரம்" 24 51 55 59
DLB

கப்ருக
திகதி 23.07.2023 வெற்றி வாரம் 1334 வர்ணம் மஞ்சள்
W 39 31 39 52 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 420,036,914.20
கப்ருக "இரண்டாம் வரம்" 17 30 64 71 A
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1984
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,583,798/-
சீட்டிழுப்பு திகதி : 2023.07.23
அத கோடிபதி ADA KOTIPATHI
29 31 56 68 K
"இரண்டாம் வரம்" 24 48 49 75 H
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி கிழக்கு
வாலை அம்மன் சனசமூக நிலையத்தின்
'அமுதவிழா' (80ஆவது ஆண்டு நிறைவு)
இனை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள

## மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் 2023

### ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம்

1ம் பரிசு 10,000
2ம் பரிசு 7,000
3ம் பரிசு 5,000



### மரதன் ஓட்டம் (ஆண்கள்)

1ம் பரிசு 10,000
2ம் பரிசு 7,000
3ம் பரிசு 5,000



### மரதன் ஓட்டம் (பெண்கள்)

1ம் பரிசு 10,000
2ம் பரிசு 7,000
3ம் பரிசு 5,000

எமது வாலை அம்மன் சனசமூக நிலையத்தின் 'அமுதவிழா' இனை முன்னிட்டு எமது நொதேண் விளையாட்டுக்கழகம் நடாத்தும்

## மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டிகள் மற்றும் மின் ஒளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

போட்டிகள் நடைபெறும் இடம்:
யா/செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானம்

1. விலகல் முறையிலான மென்பந்து துடுப்பாட்ட போட்டி
7 பேர் 5 பந்து பரிமாற்றங்கள்

1ம் பரிசு 30,000 2ம் பரிசு 20,000

இறுதி ஆட்டநாயகன் 5000/-
தொடர் ஆட்டநாயகன் 10000/-
அனுமதிக் கட்டணம் 3000/-



2. கரப்பந்தாட்ட போட்டிகள் (Setup Game)

1ம் பரிசு 30,000 2ம் பரிசு 20,000

அனுமதிக் கட்டணம் 1000/-

- கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் வீரர்கள், வீராங்கனைகள் கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.
- மென்பந்து துடுப்பாட்டம் மற்றும் கரப்பந்தாட்ட போட்டிகளுக்கான அனுமதிக் கட்டணங்களை கீழ்க்குறிப்பிடப்படும் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை கீழ்க்குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு வாட்செப் (Whatsapp) செய்யவும்.

**கணக்கு விபரம்**
வாலை அம்மன் சனசமூக நிலையம்
சேமிப்பு கணக்கு இல:- 030-2-001-8-0022804 மக்கள் வங்கி

தொடர்புகளுக்கு:- 076 652 6109, 077 564 5837
விண்ணப்ப முடிவுத் திகதி:- 28.07.2023

திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (16394)
நன்றி
நிர்வாகம்
வாலை அம்மன் சனசமூக நிலையம்

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16375)

076 825 7716 (ஆகாஸ்)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

---

## வேலையாள் உடன் தேவை

**Happy Home Restaurant & Guest House**
நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கு வேலையாள் தேவை

**Table Waiter**

- தங்குமிட வசதி, சாப்பாடு வழங்கப்படும்.
- வெளிமாவட்டத்தவர்களும் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொருத்தமானவர்கள் மு.ப 11 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நேரில் வரவும் (C-6959)

தெல்லிப்பழை றோட், வட்டுக்கோட்டை
076 543 3338, 077 438 6508

---

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லைவயல் 2 ஆம் ஒழுங்கையில் 75 3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
அராலி வீதியூடாகவும் பாதை உண்டு.
பரப்பு ரூபாய் - 150,000/= லட்சம் முதல் (16393)

077 352 5670
077 894 7293

---

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=



(16349)
T.P:077 544 8503

---

## மணமகள் தேவை

யாழ் R.C மதத்தைச் சேர்ந்த தனியார் வங்கியின் வாகன பொது காப்புறுதி உத்தியோகத்தராக பணியாற்றும் 1986 ஆம் ஆண்டு பிறந்த மிதுனராசி திருவாதிரை நட்சத்திரம் 76 பாவுமுடைய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (16387)

077 008 3491

---

## மணமகன் தேவை

யாழ் R.C மதத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச தொழில் புரியும் மீணமகளுக்கு மணமகன் தேவை. யாழில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கிரகபாவம் 19 3/4 விருச்சிக ராசி நட்சத்திரம் அனுசம் (16387)

076 260 5156

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 1944.08.11
இறப்பு 2023.07.23

### பொன்னன் வன்னியசிங்கம்
(லாலாசோப் உரிமையாளர் - அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் வன்னியசிங்கம் அவர்கள் 23.07.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:
மகன் - 077 18 800 17
பேரன் - 077 66 88 183

தகவல்:
குடும்பத்தினர்

---

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

(16395)

076 057 0354
076 826 0354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.